**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.155/2019**

பெயர்-.திருமதி அழகுமணி (எ) நதியா நாள்.16.04.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. நிருபண உறுதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் குடியிருந்து வருவதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். ஆதார் அட்டை, புகைப்படம் போன்ற நகல்களை கொடுத்துள்ளேன். நான் சொல்வது போன்று ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வயது 20 என்பதை காண்பிக்கும் வகையில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பள்ளி மாற்று சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போன்று பள்ளி மாற்று சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. நான் 08.08.1999 ல் பிறந்தேன். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கடம்பூர், பசுவண்ணாபுரத்தில் 10 வகுப்பு படித்தேன். எந்த வருடம் முடித்தேன் என்றால் ஞாபகமில்லை. ஆனால் அப்போது 18 வயது இருக்கும். எனது பிரமாண பத்திரிக்கையில் எனக்கு எந்த வருடம், எந்த மாதம், எந்த தேதியில் திருமணம் நடந்தது என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது என்னால் திருமணம் நடந்த தேதியை குறிப்பிட்டு சொல்ல இயலுமா என்றால் தெரியாது. திருமணம் முடியும் போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 10 வகுப்பு முடிந்து 2 வருடங்கள் வீட்டில் இருந்தேன். அப்போது தான் திருமணம் நடந்தது.

3. மேற்சொன்ன விவரங்களின் படி எனக்கு திருமணத்தின் போது 20 வயது இருக்குமா என்றால் ஆமாம். சாதி குல வழக்கப்படி திருமணம் நடந்தது என்று சொல்லும் நிலையில் எந்த சாதி குல வழக்கப்படி திருமணம் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கும் காலம் சென்ற சௌந்திரராஜனுக்கும் திருமணம் நடந்தது என்பதை காட்டும் வகையில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. மேற்படி திருமணம் நடந்தது என்பதை காண்பிக்கும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் எத்தனை வருடம் குடும்பம் நடத்தி வந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

5. எனது கணவர் காலம் சென்ற பின்பு தான் அவரது வீட்டிலிருந்து என் வீட்டிற்கு வந்தேன். நான் எனது கணவருடன் அவர் காலம் செல்வதற்கு முன்பு 1 வருடம் இருந்தேன். அவர் இறக்கும் பொழுது எங்களுக்கு திருமணம் ஆகி 5 வருடங்கள் இருக்கும். எனது கணவரின் வீட்டு முகவரி தெரியுமா என்றால் கதவு எண் தெரியாது. காடகநல்லி, குத்தியாலத்துார் கிராமம் ஆகும். சௌந்திரராஜன் எந்த தேதியில் காலம் சென்றார் என்று மறந்துவிட்டது.

6. எனது கணவருக்கு விபத்து ஏற்படும் போது நான் எனது தாயார் வீட்டில் இருந்தேனா என்றால் இல்லை. அவருக்கு விபத்து ஏற்பட்ட பேருந்தில் நானும் அவருடன் பயணம் செய்தேன். சௌந்திரராஜனின் இறப்பு சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா.சா.ஆ. 1 ஆன இறப்பு சான்றிதழில் மனைவி என்ற இடத்தில் என்னுடைய பெயர் இல்லை. ஆனால் அவரது பெற்றோர் பெயர் உள்ளது. நான் மனைவி என்ற இடத்தில் என்னுடைய பெயர் இல்லை என்று எவ்வித ஆட்சேபனையும் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்ன ஆட்சேபணை செய்துள்ளேன் என்றால் எங்கள் ஊரில் இறப்பு சான்றிதழ் கொடுத்தவரிடம் கேட்டுள்ளேன்.

7. இறப்பு சான்றிதழ் குத்தியாலத்துாரில் தான் வாங்கப்பட்டது. தற்போது நான் எனது பெற்றோர் வீட்டில் பெரியஉள்ளேபாளையம், கதவு எண்.1/7 ல் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது வீட்டில் தான் இருக்கிறேன். தற்போது எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. 2022 ம் வருடத்தில் எனக்கு சலபதி என்பவருடன் திருமணம் ஆகியுள்ளது என்றால் இல்லை. சலபதி என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. நான் நகரம் மகளிர் காவல் நிலையத்தில் சலபதி அவரது பெற்றோர் மற்றும் சகோதரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுக்கவில்லை.

8. 2022 ம் வருடத்தில் எனக்கும், சலபதிக்கும் திருமணம் முடிந்து சலபதி தொழில் செய்வதற்காக என்னிடம் பணம் கேட்டு தொல்லை செய்வதாக சாம்ராஜ்நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் 498A, 504, 506, 34 இ.த.ச.பிரிவின் கீழ் குற்றஎண்.27/2022 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் விசாரணையில் எத்தனை முறை காவல் நிலையம் சென்றுள்ளேன் என்றால் நான் போகவில்லை. நான் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு வயது குறைவாக உள்ளது என்று விஜயா, நாகராஜ் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கு போட்டு 7 வருடங்கள் இருக்கும்.

9. நான் இவ்வழக்கில் காலம் சென்ற சௌந்திரராஜனின் வாரிசு என்றும், விஜயா, நாகராஜ் சௌந்திரராஜனின் வாரிசுகள் என்றும் வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். இவ்வழக்கு நிலுவையில் நான் தனிப்பட்ட முறையில் சௌந்திரராஜனின் வாரிசு என்று வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்தி வைக்கப்படுகிறது.**

PUSHPARAJ SHARMILA

Digitally signed by PUSHPARAJ SHARMILA
Date: 2025.04.16 13:29:58 +0530